ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

रथ्याकर्पटविरचितकन्थः पुण्यापुण्यविवर्जितपन्थः ।
योगी योगनियोजितचित्तो रमते बालोन्मत्तवदेव ॥

**रथ्याकर्पटविरचितकन्थः** - வீதியில் கிழிந்தும் அழுக்கடைந்தும் கிடக்கும் வஸ்திரத்தை தரிப்பவரும்

**पुण्यापुण्यविवर्जितपन्थः** - புண்யம் பாபம் என்கிற விதி நிஷேதங்களைத் தாண்டியவரும்

**योगनियोजितचित्तः**- ஈசுவரானுஸந்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சித்தத்தையுடையவருமான

**योगी** - யோகாப்பியாஸத்தையுடைய மஹானானவர்

**बालोन्मत्तवदेव** - விவேகமில்லாத பாலன் சித்தஸ்வாதீனமில்லாத பயித்தியக்காரன் இவர்களைப்போல்

**रमते** - தம்மிஷ்டப்படி விளையாடுகிறான்.

புத்திரன் மித்திரன் களத்திரம் பொருள் பூமி முதலியவைகளிலுள்ள பற்றுதலை முற்றிலும் விட்டு மற்றுமுள்ள விஷயங்களையும் துச்சமென்று தள்ளிவிட்டு பரவைராக்கியத்தையடைந்து எப்பொழுதும் ஈசுவரத்தியானத்திலமர்ந்து ஆத்மானந்தத்தையனுபவிக்கும் மஹானின் நிலைமையையறிவிக்கிறார்.

உலகிலுள்ள ஜனங்களுக்காக வீதியில் உபயோகமில்லை என்று போடப்பட்டதாயும் ஜீர்ணமாயும் அழுக்குள்ளதாயுமான சுலபமாய்க் கிடைக்கக்கூடிய வஸ்திரத்தைத் தரிப்பவரும் (இதினால் தாம் விருப்பத்துடன் வஸ்திரத்தை அபேக்ஷிக்கவில்லை என்று தெரிகின்றது.) வர்ணாசிரமங்களுக்குற்ற சாஸ்திரீயமான விதிகளையும் விலக்க வேண்டியவைகளையும் எதிர்பார்க்கும் நிலைமையைத் தாண்டி மேல்படிக்குச் சென்றிருப்பவராயும் எப்பொழுதும் பரமாத்மஸ்வரூபத் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் தம் மனத்தையுடையவரும் (இதனால் தம்மிஷ்டப்படி இருக்கவேண்டியதற்காக உலகத்தாரை வஞ்சிக்க வேண்டி யோகி என்று வேஷம்போடாதவரென்று வெளியாகிறது) உண்மையில் யோகி என்று கூறக்கூடிய பெரியார் பாலனைப்போலவும், பித்தனைப்போலவும் உலகில் கிரீடை செய்வார். இதினால் மஹான்கள் ஆத்மவஸ்துவைத் தவிர்த்து மற்றொன்றில் விருப்பமும் வெறுப்புமில்லாதவர்களென்றும் ஜகத்வாஸனையைப் பூராவும் துறந்தவர்களென்றும் நன்கு வெளியாகின்றது.

# ஆர்ய தர்மம்.

க்ஷய௵ மார்கழி-மீ ௧௨


## ஸ்ரீ பரமேசுவரஸேவை முக்கியம்.

दुर्मतिसुमत्यभिख्याधरमित्रोक्त्या प्रभोर्महेशस्य ।
लाभस्सेवाकरणादसेवया नष्टएव संभवति ॥

ஸுமதி என்றும் துர்மதி என்றும் பெயர் பூண்ட இரண்டு நண்பர்களுடைய வினாவிடை மூலமாக ஸ்ரீ பரமேசுவரருடைய ஸேவையினால் விசேஷலாபமுண்டாகுமென்றும் அவரை ஸேவிக்காமல் அநாதரவாயிருப்பதால் அதிக நஷ்டமேற்படுமென்றும் அறிவிக்கப்படுகின்றது.

ஸுமதி:—பிரியநண்பனே! தற்காலம்பிர்ம்மா முதலானஸகல விண்ணவர்களால் வணங்கக்கூடிய மஹிமை வாய்ந்த பொற்பாத கமலங்களையுடையவரும் தொண்டர்களனைவருக்கும் எப்பொழுதும் மங்களத்தையளிக்கும் சக்தி பெற்ற ஸ்ரீமங்களாம்பிகை என்றும் திருநாமம்பூண்ட தமது தேவியுடன் கூடி விளங்குகிறவருமான ஸ்ரீ ஆதிகும்பேசுவரருக்கு நகரவாசிகளான ஜனங்களுக்கு அதிக ஆனந்தத்தைக்கொடுக்கும் சிறந்த உத்ஸவமானது துவக்கமாயிருக்கிறது என்று நேற்று ராமநாதன் மூலமாகக் கேள்விப்பட்டேன். ஸ்ரீ பகவானுடைய தர்சனமானது ஸகலபாபங்களையும் அறவே போக்குமென்பது உன்னாலும் அறியப்பட்ட விஷமே? ஆகையால் நீயும் வா. தேவாலயத்திற்குச் சென்று பகவானைத் தர்சிப்போம்.

துர்மதி:— அற்பகோபத்துடன் பக்தசிகாமணே! வேறு கார்யங்களை ஒன்றையும் கவனியாமல் ஸ்ரீ மஹேச்வர உத்ஸவத்தைத் தர்சிப்பதே இப்பிறவிக்கு முக்கியப் பிரயோஜனமென்று ஒவ்வொரு தேவாலயங்களிலும் நீ சுற்றிக்கொண்டிருக்கிறாய்

நானும் உன்னோடு கூட எப்பொழுதும் ஆலயங்களைச் சுற்றிக் கொண்டிருக்க எனக்கு ஸாத்தியமில்லை. மேலும் ஐந்தாறு தினங்களுக்கு முன் பகவானுடைய உத்ஸவத்தைத் தெரிசிக்கவேண்டி இரவு பூராவும் கண்விழிக்கும்படி நேரிட்டது. அதனால் எனது சரீரத்துக்கும் சௌகரியமில்லை. மறுபடியும் இப்பொழுது சரீரத்துக்கு அவ்வித சிரமத்தைக் கொடுக்கக்கூடிய தேவோத்ஸவமானது வந்துவிட்டதே என்று நான் மிகவும் துக்கப்படுகிறேன்.

ஸுமதி:— அடே மூர்க்கா! ஸ்வாமி தெரிசனங்கூட உன் சரீரத்துக்குப் பீடையை உண்டுபண்ணுகிறதா? இனி இவ்விதம் கூறாதே. பரமாத்மாவான ஸ்ரீ பகவானுடைய தெரிசனமாத்திரத்தால் பக்திமான்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் விசேஷமான சிரேயஸ் ஏற்படுகின்றது. ஆகையால், என்னுடைய வசனத்தை நம்பி, நீயும் கூடவா. பகவத்பக்தி யில்லாதவனான உனக்கும் ஸ்ரீ பரமாத்மாவினுடைய தெரிசனத்தால் பக்தி உண்டாகும்.

துர்மதி:— அவ்விதமே வருகிறேன் என்று தன் மித்திரனுடன் சேர்ந்து தேவாலயத்துக்குச் சென்றான்.

ஸுமதி:— வியப்புடன், மஹோத்ஸவத்தின் பெருமையை எவ்விதம் கூறவியலும்! என்ன ஆச்சரியம்! இங்கு கைலங்கிரியையலங்கரிப்பவரும் லீலையால் தரிக்கப்பட்ட கும்பேசுவார் என்கிற சரீரத்தையுடையவரும் மங்களாம்பிகை என்று பிரஸித்தி பெற்ற லோகமாதாவான தம் பாரியையால் பிரகாசிக்கின்ற வாமபாகத்தையுடையவரும் பக்தர்களுக்குள் சிறந்தவர்களான ஸனகாதி முனிகணங்களால் துதிக்கப்பட்ட பிரசித்தமான நற்குணங்களையுடையவரும் மூவுலகங்களுக்கும் சிருஷ்டிகர்த்தாவாயும் விளங்கும் பகவானான ஸ்ரீ ஆதிகும்பேசுவரானவர் ரெத்னஸிம்மாஸனத்தை யலங்கரிப்பவராகக்கொண்டு, அதிக காந்தியுடன் கூடிய தமது திருமேனியால் பக்தகோடிகளின் மனதை ஆகர்ஷணம் செய்கிறவராகப் பிரகாசிக்கின்றார். பிரும்மா முதலிய தேவர்களாலும் வணங்கக் கூடிய இந்தப் பிரபுவை நானும் வந்தனம் செய்கிறேனென்று நமஸ்கரித்தான்.

தர்மதி:— சந்தோஷத்துடன், ஸகே! இங்குபார்! மேள வாத்தியங்களைக்கேட்க வேண்டிப் பல ஜனங்கள் ஓடி வருகிறார்கள். மற்றோரிடத்தில் தம்சரீரசோபையால் அப்ஸரஸ், மேனகை முதலிய தேவஸ்திரீகளையும் ஜெயிக்கும் சக்தி பொருந்திய கணிகா ஜனங்களால் யுவாவான ஜனங்கள் வஞ்சித்து இழுக்கப்படுகிறார்கள். உனது நிர்ப்பந்தத்தால் தேவதெரிசனத்துக்காக வந்த நான் இங்கு நேர்ந்த தேவதாஸிகளின் தெரிசனத்தால் கிருதார்த்தனாக ஆனேன்.

உபபத்திராதிபர்.

(தொடரும்)

---

# வேதக்ரவ்ய வகுப்புக்கள் வேண்டும்.

பிராமணர்கள் தங்கள் தன்மைக்குறிய வேதாத்யயநத்தை விட்டதால் வர்ணிக்கமுடியாத துன்பங்களுக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. இன்னும் எதிர்பாராத பல கஷ்டங்கள் நேரிட்டபோகின்றன. ஸகல கர்மாக்களின் ஸாரமாக ஸந்தியாவந்தநமமைக்கப்பட்டிருக்கிறது. ஸகல வேதஸாரமானது கர்யத்ரீ. மந்த்ராத்தமானது காயத்ரீ அதை ஒன்றையாவது முறைதவராமல் அக்ஷாஸ்வரப்பிசகில்லாமல் ஜபித்துவந்தால் போதுமென மிக மிகக்குறைவான இம்மதக்கடமை மஹரிஷிகளால் விதிக்கப்பட்டுளது. தென்னிந்தியாவில் வைதிகர், லௌகிகர், உத்யோகஸ்தர், மாணவர் முதலியவர்களுக்குள் எத்துணைப்பேர்மேற்சொன்னபடி சிரத்தையுடன் அநுஷ்டிக்கின்றனரென்ற கேள்வியின் உண்மை பதிலைக்கேட்டு ஆஸ்திகர்கள் உள்ளம் உருகாமலிராது. பலர் தலைக்குமேல் வீண்வேலைகளை வைத்துக்கொண்டு ஆஸ்திகமிருந்தும் அவகாசமில்லை, என்கின்றனர். அதன் அருமையை அறியாமல் சிலர் யார்கேட்கிறார்கள்? செய்தாலென்ன? விட்டாலென்ன? எனத்திரிகின்றனர். அந்தோ ? மஹரிஷிகளின் ஸந்ததி எவ்வளவு கேவல நிலைமைக்கு இதற்குள் வந்துவிட்டது! பலர் உபநயந

மாகும் நாலுநாளோடு உத்யாபநம் செய்து விடுகின்றனர். முக்காலும் ஸ்கூல் பிள்ளைகள் ஸந்தியை என்றால் என்ன? எனக் கேட்கின்றனர். வற்புறுத்தினால் வழக்கமில்லை 'ஸார்' என்கின்றனர். தந்தைகளே விட்டிருப்பதால் எனக்கென்ன சிறுவனுக்கு எனவுங் கூறுகின்றனர்.? சில வேதகாவ்யபாடசாலைகளிலும் போதியவரை இவ்வநுஷ்டானம் நன்கு நடைபெறுவதில்லை. மிக்க சிரமப்பட்டு ஏராளமான மூலதநம் வைத்து உடை, அன்னம், மேல் செலவு முதலியவைகளையளித்து வேதவேதாந்தத்தைக் கற்பிக்கும் சிலவிடங்களில், இப்படிப்பும் பரீக்ஷைக்கு உதவுவதால், ஆங்கில மாணவர்களைப் போலவே நாமுமிருக்க வேண்டும் என அங்கி அணிந்தும், உரிய உடையில்லாமல் கிருஹஸ்தவர் கட்டாடையணிவதும், சிகையைக் கத்தரிப்பதும், முகவபநம்செய்துக்கொள்வதுமான துராசாரங்களைக் கைப்பற்றுகின்றனர். இவர்களுக்கு ஸந்தியை முதலிய வைதிககர்மாவில் எவ்வளவு சிரத்தை இருக்குமென்பது தானே விளங்கும்.

எந்தக் கர்மாவிற்கும் முதற்படியானது ஸந்தியை, அதை விட்டவன் எதற்கும் அநர்ஹன் என்பதன்றோ சாஸ்திரமுறைமை. பாடத்தை படிக்காவிட்டால்குரு கேட்பார்பரீக்ஷை தேராவிடில் அவமானம். பிழைப்பிற்கில்லை. ஆதலால் அவைகளை விடக்கூடாது? ஸந்தியை செய்யாவிட்டால் யார்கேட்கலாம்? ஸ்வாமியா வந்து கேட்கப்போகிறது? அதைத்தான் விடலாம். வேறெதையும்விட முடியாது எனத் தற்கால உலகம் துணிந்து நிற்கிறது. கிராமாந்தரங்களில் ஊராருக்குப் பயப்படுவதுண்டு. ஆங்கிலப்படிப்பில் உத்யோக மோகத்தால் ஊர்ஊராகத்திரிந்து செய்பவர்யாருக்கு அஞ்சவேண்டும். ஆசாராநுஷ்டானத்தை வற்புறுத்தும்பெரியாரும் அரிதாகிவிட்டனர். இந்நிலை வெகு நாள் நீடித்திருந்தால் ஸநாதந தர்மத்திற்கே மோசம் நேரிடும். அன்ய மதம் தலைவிரித்தாடும். இந்தியா பச்சாத்தாபப்படும்படி நேரிடும். ஆதலால் காலத்தில் எச்சரித்துக் கூடியவரைத்திருத்துவது மடாதிபதிகள், பண்டிதர்கள் ஆஸ்திகர்கள், மகாஜனங்கள் கடமையாம்.

நீசோபமையாயினும் பாதிரி சங்கங்களையும் அவர்களது உழைப்பையும் கூறாமலிருக்க முடியாது. ஏராளமான பொருளைத் தனிகர் தருகின்றனர். பாதிரிகள் தன்னலம்பாராது உழைக்கின்

றனர். திருச்சி முதலியவிடங்களில் ஸ்கூல் மூலமாய் எவ்வளவு இந்தியரைச் சேர்த்திருக்கின்றனர். தனிபாக அவர்கள் ஓர் வீதி அமைத்து திருசங்குபோல் நடுவில் தவிர்ப்பது ஒவ்வொரு மதாபிமானிகளுக்கும் அவமானமன்றோ? தனிகர் தனத்துடன் பிறக்கவில்லையென உணர்ந்து மதச்சங்கங்களுக்கு ஏராளமாக உதவவேண்டும். பண்டிதர்கள் தாம் வாழ்வு சாசுவதமல்ல என உணர்ந்து கூடியமட்டும் இக்கைங்கரியத்தில் புகவேண்டும். ஒவ்வொருவராக நம்மைப் பாதிரிமார்கள் பரிகொண்டனர். கொள்கின்றனர் கொள்வார். நாம் நம்மதத்தினரை ஆழ்ந்தமதாபிமானியாக மாற்ற வேலை செய்யுங்காலம் வந்து விட்டது. கூட்டங்கள் மகாநாடுகள் காங்கிரஸ்கள் செய்யும்வேலை தத்காலஉணர்ச்சியைக் கிளப்புகிறதேயன்றி வேறொன்றும் செய்வதில்லை. கூடிக்கூடியும் பேசுவதிதுவே. கிராமத்தில் சாந்தமாக வேலை செய்யவேண்டும் என்றே.

ஆதலால் ஒவ்வொரு பண்டிதர் மூலம் ஒவ்வொரு வேதகாவ்யவகுப்பாவது தோன்றவேண்டும். இப்படிப்பட்டவேலையைக் கண்டு போராவாக்கொண்டு பல கஷ்டங்களைப் பொருத்துக்கொண்டு பிரும்மரூபங்கள் ஆர்யதர்மபத்திராதிபர்கள் ஆங்காங்கு வந்து பிரசாரம் செய்வதோடு பத்திரிகையாலும் வற்புறுத்துகின்றனர். அதோடு கும்பகோணத்திலும் ஸ்கூல் மாணவர்களைச் சீர்திருத்த ஓர் வகுப்பை ஏற்படுத்தாதிருந்தால் ஏற்படுத்தும்படி அவர்களை வந்தன பூர்வமாக வேண்டுகிறேன். ஸ்கூல்களில் பண்டிதர்களாயுள்ளவர்களே அதிகப்பொறுப்புள்ளவராவர். இவ்வேலையைத் துவக்க ஸௌகரியமுள்ளவர்களுக்குண்டு. சிறுவர் நிலை சீர்திருத்தினாலல்லது வேறு வகையில்லை. ஆரம்பத்தில் பல கஷ்டங்களுண்டாகுமென்பதை அநுபவத்துடனறிவேன். ஆதலால் அவைகளைப் பொறுத்துக்கொண்டு தலைமை உபாத்தியாயர் ஸஹாயத்தைக்கொண்டு காலைமாலைகளில் நகரங்களில்இதைத்துவக்கவேண்டும். இது ஆண்டவன் பணியாகும். நமது கடமையும் தர்மமாகும். இம்மைப்பயனை எதிர்பார்க்கலாகாது. எவரேனுமளித்தால் மறுக்கவும் வேண்டாம். ஸ்வரப்பிழையால் இந்திரசத்துருவைக்கோரிய அசுரர் இந்திரனால் கொல்ல அசக்தரானது போல் கொஞ்சமநுஷ்டிப்பவரும் ஸ்வராக்ஷரத்தவறினால் பூர்ண

பயணைப் பெறுவதில்லை. ஆதலால் ஸ்வரத்துடன் ஸந்தியை யாவது கற்பிக்கவேண்டும். பின்னர் அவசியமான ருத்ரசமக சூக்தங்களைக்கற்று பிராமண்யத்தை இழக்காமலிருக்கலாம். மிக்க வணக்கத்துடன் பண்டிதர்களை சிரோமணிகளை இதிலீடுபட்டு ரிஷிகள் கடனைத்தீர்க்கும்படி பிரார்த்திக்கிறேன்.

பணிவுள்ள,

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா.

---

## அமரகலாவிலாஸினீ ஸபையின் தீர்மானங்கள்.

சென்ற 15௨ சாந்தாச்ரமத்தில் பிரும்மஸ்ரீ ராமநாத தீக்ஷிதர் தலைமையில் கூடியஸபையில் அடியிற்கண்ட தீர்மானமானங்கள் ஏகமனதாகச் செய்யப்பட்டன.

1. "ஆர்யதர்மம்" பத்திரிகை போதுமான மதப்ரசாரம் செய்துவருவதால் அதை மாதப் பத்தரிகையாக்கும் எண்ணத்தை விட்டு வாரமிரண்டு முறையாக்கும்படி மிக்க வணக்கத்துடன் ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாளை அநேக நமஸ்காரத்துடன் வேண்டுவதாக ஷை மேனேஜர் விஜ்ஞாபநம் செய்து கொள்ளும் படி பிரார்த்திக்கிறது. (பலர் கை எழுத்துக்கள் வாங்கி அனுப்பப் பட்டிருக்கிறது.)

2. ஸ்ரீமகா ஸன்னிதானத்தில் சென்னைமாநகரத்திற்கருகில் விஜயம் செய்து பக்தர்களைப் பாததூளியால் பாவநமாகும்படி யும் நாஸ்திகத்தையகற்றும்படியும் விஜ்ஞாபநம் செய்துகொள் ளும்படி (எங்கள்சார்பாக) பத்திரிகைமானேஜரை வேண்டுகிறது.

3. எங்கள் பிரார்த்தனைக்கிணங்கி, திருக்கோவிலூருக்கு டுத்தகீழூரில் வேதகாவ்யகுப்பை ஆரம்பித்த வருஷம் ஆர்யதர்மா பிவ்ருத்தினி ஸபைக்கு அன்னையூரில் ஷைவகுப்பை நடத்திவரும் பிரும்மஸ்ரீ ராமச்சந்திர அய்யரவர்களுக்கும் இச்சபைமனமார்ந்த வந்தனமளிக்கின்றது.

4. ஏனைய கிராம நகரங்களிலும் இதே போல் வகுப்பை ஆரம்பித்து மாணவர்களை சீர்திருத்தும்படி வேண்டுவதோடு எவ்விடத்தில் மகாஜனங்கள் கூடி 10 பேருக்குக் குறையாமல் வேண்டினால், சாந்தாச்ரமம் 154 தம்புசெட்டி தெருவுக்கு எழுதும்டியும் உடனே அங்கு ஓர் வகுப்பை ஆரம்பிக்க முயற்சிப்பதாகவும் தீர்மானிக்கிறது.

## சாரதாவிலாஸ ஸபா, சேங்காலிபுரம்.

இவ்வூர் ஸ்ரீ ஜகத்குரு வித்யாசாலையில் 19—11—26 மாலை 2-30 மணிக்கு ஷை ஸபாசாச்வத அக்ராஸனர்களான ப்ரம்மஸ்ரீ K. S. ஸுப்பையா சாஸ்திரிகள் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் இச்சபையின் மூன்றாவது மீட்டிங்கு நடைபெற்றது. அச்சமயம் முன்மீட்டிங்கில் நடந்த விஷயங்கள் கார்யதர்சியால் எடுத்துரைக்கப்பட்ட பின்னர், ஆசாரியாளின் அவசியம் சிவ பூஜையின் மாயுத்மியம் ராமாயணத்தில் சிலபாகம் ஈசுவரபக்தி பரோபகாரம் முதலிய விஷயங்களைப்பற்றி பாடசாலை வித்தியார்த்திகள் விஸ்தாரமாகவும் கேட்போருக்கு ஆனந்தகரமாகவும் உபன்யஸித்த பின்பு அனேகர்களின் ப்ரார்த்தனைக்கிணங்கி அக்ராஸனாதிபதிகளால் ஸந்த்யாவந்தனம் என்னும் விஷயமானது விரிவாகவும் ஆஹ்லாத ஜனகமாகவும் உபன்யஸிக்கப்பெற்றது. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

“ப்ராம்மணர்களுக்கு எல்லாவித கர்மாக்களைக் காட்டிலும் முக்யமானது ஸந்த்யாவந்தனந்தான். அதன் அனுஷ்டானத்தாலே ஸகல புருஷார்த்தங்களையும் அடையலாம். முதலில் இதன் ஸ்வரூபம், பலம், அதிகாரி இவைகள் தெரிந்தால் தான் ஒவ்வொரு காரியங்களிலும் ப்ரவ்ருத்தி ஏற்படுமாதலால் அவைகளுள் ஸ்வரூபத்தை விசாரிப்போம்:— ஸந்த்யை என்னும் பதத்திற்கு பகலும் இரவும் சேருகிற காலமும் இரவும் பகலும் சேருகிற காலமும், அக்காலங்களில் செய்யப்படும் கர்மாவும், உபாஸிக்கப்படும் தேவதையும் பொருளாகும். ஒன்றரையாமத்திற்கு மேல்பட்ட பகலுக்கும் அக்காலத்தில் செய்யப்படும் கர்மாவிற்கும் மாத்யாந்ஹிக ஸந்த்யை என்று பெயர். இந்த ஸந்த்யைகளை “सान्ध्यं कर्म समाचरेत्” என்ற வசனத்தால் கர்மாவாக

வும் "अहरह: सन्ध्यामुपासीत" என்கிறவசனத்தால் உபாஸனமாகவும் "असावादित्यो ब्रह्मेतिब्रह्मैव सन्ब्रह्माप्येति यएवंवेद" என்னும் வசனத்தால் ஞானமாகவும் சொல்லப்படுகிறது. அதில் காயத்ரியால் செய்யப்படும் அர்க்யப்ரதானத்தை கர்மாவென்றும் "असावादित्योब्रह्म" என்று ஆலம்பன பூர்வகமாக தியானிப்பதை உபாஸ்தி என்றும் இதையே ஸூரியமண்டல உபாதியையும் சரீரோபாதியையும் விலக்கிவிட்டு த்யானிப்பதை ஞானமென்றும் சொல்லுகிறார்கள். ப்ராதஸ்ஸந்த்யையானது

"उत्तमा तारकोपेता मध्यमा लुप्ततारका ।
अधमा सूर्यसहिता प्रातःसन्ध्या त्रिधा स्मृता"

"நக்ஷத்திரங்கள் இருக்கும்போது செய்வது உத்தமம். நக்ஷத்திரங்கள் அஸ்தமித்தபிறகு செய்வது மத்திமம். ஸூர்யோதயத்திற்குப் பிறகு செய்வது அதமம்" என்று கூறப்பட்ட காலத்தில் பல் துலக்கி ஸ்னானம் செய்த உடன் செய்ய வேண்டியது. மாத்யாங்ஹிக ஸந்த்யையானது

"अध्यर्धयामादूर्ध्वं माध्याह्निकी सन्ध्या"

ஒன்றரையாமத்திற்கு மேல் மாத்யாங்ஹிககாலம்" என்று சொல்லப்பட்ட காலத்தில் மாத்யாங்ஹிக ஸ்நானத்திற்குப் பிறகுசெய்ய வேண்டியது. ஸாயம் ஸந்த்யையானது

"उत्तमा सूर्यसहिता मध्यमा लुप्तसूर्यका ।
अधमा तारकोपेता सायं सन्ध्या त्रिधा स्मृता"

"ஸூரியன் தெரியும்போதே செய்வது உத்தமம். அவன் மறைந்த பின் செய்வது மத்திமம். நக்ஷத்திரோதயத்திற்குப் பின் செய்வது அதமம்." என்றபடி உசிதமான காலத்தில் செய்யவேண்டியது. இவ்வபிப்பிராயத்தையே "காணுமற் கோணுமற் கண்டு கொடு" என்று திராவிட பாஷையிலும் சொல்லி இருக்கிறது. வெளியூருக்குப்புறப்பட்டுப்போகும்போதுவழியில்ஸந்தியாகாலம் வந்து விட்டாலும் அச்சமயம் ஜலம் கிடைக்காவிட்டாலும் காலத்தைத் தவறவிடாமல் மணலை வைத்துக் கொண்டாவது ஸந்த்யாவந்தனத்தில் முக்கியமான அர்க்யப்ராதனத்தைச் செய்து ஆதித்யனை த்யானிக்கவேண்டியது. மிகுந்த ஆபத்காலத்திலும் அந்த மந்திரங்களையாவது உச்சரித்து ஆதித்யனை த்யானிக்கவேண்டும். அர்க்யப்ரதானம் ஆதித்யத்யானம் காயத்ரீஜபம், இவைகள் முக்கியமாம்.

"शुचिर्वाप्यशुचिर्वापि काले सन्ध्यां समाचरेत्"

என்ற வசனங்களால் காலத்தைத் தவறவிடாமல் அக்காலத்தில்

கூடியவரை சுத்தி செய்துகொண்டு புண்ட்ரம் தரித்துக்கர்மாவை முடிக்கவேண்டும்.

"सन्ध्याहीनोऽशुचिर्नित्यमनर्हः सर्वकर्मसु"

ஸந்த்யாவந்தன கர்மாவைச் செய்யாதவன் மற்றெந்த கர்மாவையும் செய்ய யோக்கியனல்லன் என்று சொல்லியிருப்பதால் ஒருபொழுதும் இதை விடக்கூடாது.

பிரயோஜனம்:—

"सन्ध्यामुपासते ये तु सततं संशितव्रताः ।
विधूतपापास्ते यान्ति ब्रह्मलोकं सनातनम्"

எவர்கள் ஸந்த்யாகாலத்தில் செய்யவேண்டிய கர்மாவை அனுஷ்டிக்கிருர்களோ அவர்கள் பாபங்களிலிருந்து விடுபட்டவர்களாகி சாசுவத ப்ரம்மலோகத்தை அடைகிருர்கள் என்று இதற்கு முக்ய பலம் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கர்மாவைச்செய்ய அதிகாரிகள் உபநயந ஸம்ஸ்காரமடைந்த ப்ராம்மண க்ஷத்திரிய வைசியர்கள்.

ஆகையால் இவ்வளவு உத்தமமான பலனைத் தரக்கூடியதும் சிரமஸாத்யமில்லாததுமான இக்கர்மாவைச் செய்து பாபங்களிலிருந்து விடுபட்டு பரமாத்மாவின் ஸாயுஜ்யத்தையடைவோமாக" என்று உபன்யாஸங்கள் முடிந்த உடன் வந்தனோபசாரத்துடன் ஸபை கலையப்பெற்றது,

காரியதரிசி,
சாரதாவிலாஸ ஸபா.

---

ஸ்ரீமதாசார்யசரணங்களில்

## அவசர விண்ணப்பம்.

1. பொதுவாக ஆர்யதேசத்தில் தர்மோத்தேசம் பரவ விரும்பியும், சிறப்பாகத் தமிழ்நாட்டின் தற்காலக் கலி தாண்டவமொழிந்து சநாதன தர்மம் செழிந்தோங்கச் செய்யவும் ஸநாதந தர்மாபிமானிகளான புண்ய ஜனங்களின் வெகு கால சுகிர்தஸங்கல்பப் பிரார்த்தனைகளால் ஸ்ரீ ஜகத்குரு காஞ்சிகாமகோடி பீடத்தின் பேராதரவில் தோன்றி கடந்த 11-வருஷங்களாக நடைபெற்று வருகின்ற ஆர்யதர்மம் என்றும் பதினெரு வயது பாலன் இதுகாறுஞ் செய்து வந்த, வருகின்ற நன்மைகளை எவரே அளந்து கூறவல்லார்.

2. கடந்த பதினெரு வருஷங்களில் பல வருஷங்கள் குருகுல வாசஞ் செய்து படித்தறிதற்குறிய உத்தம தத்துவங்களையெல்லாம் ஆர்யதர்மாபிமானிகளின் தமது வீட்டிலிருந்தவண்ணமே இரண்டொரு ரூபாய்களால் இனிது பெற்று வந்த பெரு

நன்மை இனியும் பெரு நன்மையாக தினே தினே வளர்ந்து வா வேண்டியது அவசியமும் காலோசிதமான கோட்பாடாகவும், இருக்க “ஆர்யதர்மம், இனி மாதமொரு முறை தான் வருமாறு நிகழும்” என்ற வாசகத்தைப் படிக்குங்கால், கேட்குங்கால் நமது உள்ளம் உண்மையாகவே பகீரென்கிறது!

3. ‘ஆர்யதர்மம்’ வளர்பிறைச் சந்திரன் போல் வளர்ச்சி பெற்று வரவும், ஆர்யதர்மத்தின் மீது சுத்தமான பக்ஷம் பூண்டு சுதேசமித்திரன் போல் தினப்பதிப்பாகவும், தினப்பதிப்பாகப் படவேண்டியதுமாகிய இந்த தர்ம ஸங்கர காலத்தில், அதனை ஒரு மாதஞ் சென்றுதான் காணவேண்டுமென்றால் அதற்குள் அரக்கர்களின் அடாத செயல்கள் அநுதினம் வளராவோ!

4. ஆர்யதர்மாபிமானிகாள்! ஆர்யதர்மத்தின் இவ்வளர்ச்சிக் குறைக்கு நாம்தான் உத்தரவாதஞ் செய்ய வேண்டும். குழந்தையுந் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்” என்பதேபோல் ஆர்யதர்மமாகிய குழந்தையை பதினொருவயதுப் பாலகனை வாரம் தோறும் நம் வீடு வந்து இனிய மழலைமொழிகளால் நமது ஊனக் கண்களுக்கும் ஞானக்கண்களுக்கும் முதம் (முத்தம்) அளித்து வந்த ஞானச்சந்திரனை நாம் மாதம ஓர் முறையே காணக்கூடும். ஏனெனில், இவ்வநாதரவு, நமதநாதரவு, சிரத்தையின்மை, உலோ குணமுடைமை இவைகளையன்றோ அளந்து காட்டுகின்றது.

5. நாம் வணங்குகின்ற குருபீடத்தில் அமர்ந்துள்ள அருள் மூர்த்தியாகிய ஸ்ரீ சந்திரமௌளீசுவரனிடத்து நாம் அக்கண்களால் தினந்தோறுமே ஞானசந்திரனைக் காண்கின்றோமாதலால் நாம் சிறிது அக்கரை கொள்ளின் புறக்கண்களாலும் அந்த ஞான சந்திர மௌளீசுவரரின் ஞானமுத்ராவாசகங்கள் ததும்பிய ஆயதர்மத்தை அநுதினமும் மாலையிற் காண்டல் அரிதில்லையென்தேயுணர்வோம்’

**श्रद्धावाँल्लभते** ‘அக்கரையுள்ளவன் அடைகின்றான்’ என்றமாத்ரு வாசகத்தை மறவாது மனனம் செய்துகொள்வோமாயின் ஆர்யதர்மத்தை இவ்வருஷத்திலேயே தினப்பதிப்பாகச் செய்யாவிடினும் வாரமிருமுறைப் பதிப்பாகவாவது செய்து அடுத்த வருஷங்களில் முறையே மும்முறையாக வளர்த்து, 16-வது வயதில் ஆர்ய தர்ம பாலகனை தினகாரிய நிர்வாஹகனான (தினப்பதிப்பாகிய) திருடவாலிபனாகச் செய்ய நம்மால் கூடுமன்றோ.

6. ஆர்யதர்மத்தினிடத்தும், ஆர்யதர்ம பத்திரிகையின்பாலும் ஆர்யமத ஸம்ரக்ஷகர்களான ஸ்ரீமதாசார்யேந்த்ராளிடத்தும் ஒப்பற்ற அன்புடையவரும் பயன் கருதாதுழைக்கும் மெய்த்தொண்டருமாகிய பண்டிதமணி ஸ்ரீவத்ஸஸோமதேவ சர்மா அவர்கள் ஒரு தினசரிப் பத்திரிகையில் அறிவித்திருப்பதுபோல் ஆர்ய

தர்ம பத்திரிகையானது அவசியம் தினப்பதிப்பாக வேளிவர வேண்டிய இத்தருணத்தில் முற்போக் கடையாது பிற்போக் கடையப் பார்த்திருத்தல் நம் பிராஹ்மணசமூகத்திலுள்ளசெல்வவான்கள், சிரத்தாவான்கள், கல்விமான்கள், முதலிய அனைவர்க்கும் அவமான காமன்றோ.

7. நாகையிற கூடிய செங்குந்தர் மரபினர் தமது மகா நாட்டில் 'இந்துமதப் பிரசாரஞ் செய்யவிரும்பியும், 'இந்துதர்மஸ்தாபனமசோதா' என்னும ராவண ஸம்ஹாரததின் பொருட்டும் 'இந்துமதம்' என்ற தினப்பதிப்புப்பத்திரிகையொன்று வெளியிட வேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றனர். அவர்களைப்போன்ற தர்மாபிமானிகளு ங்களிக்குமாறு, அவசியத்தின் நெருக்கடியையுணர்ந்தற் கறிகுறியாக ஆர்யதர்மம் அவசரவளச்சி பெறுதலே எல்லா உத்தேசங்களுககும் உததமப்பொருத்தமாயிருக்க, அதன் த்ருதகதியை மந்தகதியாக்குமாறு விட்டிடுதல் எவரும் விரும்பக் கூடாததாம்.

8. நமது குருநாத ஸந்நிதானத்தில் ஆர்யதர்மத்தின் வளர்ச்சிக்கான அவசியகாரணங்களை நாமனைவரும் பிரதிகிராமங்களிலுள்ள மஹாஜனங்களின் ஆதரவு கையொப்பங்களுடன் அறிவித்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசரவேலையாகும்.

9. ஒவ்வொரு சந்தாதாரரும் 10 சந்தாதாரா சேர்த்துத் தருமாறு முயன்றால் அஸாத்யமன்று. கிராமங்களில் பெருந்தனக்காரரிருப்பதே ஆர்யதர்ம ரக்ஷணத்திற்குப்போதுமான ஆதரவளிக்கவேண்டுமென்பதைக் குறிப்பிடுகினறதாதலால் அவர்களின் இயல்பான அதிகப்பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக கடமையைச் செலுத்துமாறு மஹாஜனங்கள் பிரதிகிராமத்திலும்கூட்டங்கூடி அறிவித்துக்கொள்ளவும வேண்டும்.

10. நமது உத்தேசம் நல்லதாதலின் ஆர்யர்களின் நன்மைக்கும் ஆர்யமதத்தின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் உழைகின்ற ஆர்யதர்ம பத்திரிகையின் அபிவிருத்திக்கு நம்மாலியன்ற எவ்வகை உதவியையும் செய்யக கடமைபபட்டிருக்கின்றோமென்பதையும் ஆர்யதர்மாபிமானிகளுக்கு மிக்க வணக்கத்தோடு அறிவிததுக்கொள்வதுடன் இனியும் ஆர்யதர்மததை வாரப்பதிப்பினின்றுங் கீழ்க்கொண்டு போகாதிருக்குமாறு ஸ்ரீ ஜகத்குரு சரணங்களில் அனந்த வந்தனங்களுடன அறிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்,

இப்பபடிக்கு காஙளப்பேட்டை மகாஜனங்கள் சிஷ்யர்களான.

சுந்திரசாஸ்திரி மானஸ்வாமி என்கிற சுப்பிரமண்ணியசிவம்.
எ. வெங்கட்டராமசாஸ்திரி ச. வெங்கட்டராமசாஸ்திரிகள்.
வயித்திநாதசாஸ்திரிகள். அ. ரு. அ. ருமஸ்வாமிசாஸ்திரிகள்.
கோ. சுப்பிரமணியசாஸ்திரியள். நாசிவசுபபிரமணியசாஸ்திரிகள்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

छान्दोग्ये सा पुनर्ब्रह्मपुरमित्येव वर्णिता ।
अथर्वणेन सा स्वर्गलोकः प्रोक्तो महापुरी ॥
तैत्तिर्यज्योतिषा स्वर्ग आवृतो लोक इत्यपि ।
तद्ब्रह्मपुरमेतद्धि नान्यत्कांचीपुरादिति ॥
सर्वोऽप्युपनिषद्भागः प्रवदत्यागमैः सह ।

என்று வேத வேதாந்தங்களில் பரமாகாசமென்றும் பிரமபுரமென்றும் ஜ்யோதி ஸ்வர்க்கமென்றும் சுவர்க்கமென்றும் ஆங்காங்கு பிரதிபாதிக்கப்பட்டதாயும் "ஆருமெய்தற்கரிது பெரிதுமே ஆற்றலெய்தற்கரிது பெரிதுமே, தேருமறியாது திகைப்பரே சித்தமுமறியாது திகைப்பரே, கார்நிறத்த மணர்க்கொரு கம்பமே, வாரிருங்குழன்மை வாணெடுங்கண்மலைகள் மதுவிம்முகொன்றைத், தாரிருந்தடமார்பு நீங்காத்தையலாளுலகுய்ய வைத்த, காரிரும்பொழிற்கச்சி மூதூர்காமக்கோட்டம்" எனத் திராவிட வேதங்களாற்போற்றப்பட்டதாயும் உள்ளது காஞ்சி நகரம்.

அது அனந்த சக்தி அலுப்தசக்தி அநாதிபோதம் முதலிய எண்குணங்களையுடைய அநாதிமுத்த சித்துருவாகிய இறைவனால் விரும்பப்பட்ட நித்தியநைமித்திககாமியம் என்றமூன்றனுள்நித்தியார்ச்சனைப் பயனொன்றனையே தரும் ஏனையவுலகங்களையும் கண்டங்களையும் போலாது, இம்மூன்று அர்ச்சனைப்பயனையும் ஒருங்கே தாவல்ல கீழ்க்கடல் மேற்கடல், சேது, இமயம் என்னும் நாற்பாங்கெல்லைக்குட்பட்ட இப்பாதகண்டத்திற்சிறந்து விளங்குவது:-

அன்றியும், சிவக்ஷேத்திரங்கள் பலகோடியினும் அவற்றுட் சிறந்த ஆயிரத்தெட்டினும், அவற்றுட்சிறந்த நூற்றெட்டினும்

அவற்றுட்சிறந்த அறுபத்தெட்டினும், அவற்றுட்சிறந்த காசியினும் புவனசாரம், மும்மூர்த்திவாசம், விண்டுபுரம், காஞ்சி, லயஜித்து, கலிஜித்து, சகலசித்தி, தபோமயம், பிரும்மபுரம், ஆதிபீடம், கன்னிகாப்பு, சிவபுரம் எனவரும் பன்னிருதிருநாமம் புனைந்து காஞ்சியே சால நமக்கினிய நகர் என்றிறைவனால் வலியுறுத்திச் சிறந்தெடுத்தோதப்பட்டது.

பராசக்தியினது ஸ்தன்யத்தினின்றும் பெருகிய க்ஷீர நதி சங்கமமாகிய கீழ்க்கடற்கரையும், பிநாகத்தினால் வெளிப்பட்ட கங்கையாகிய தக்ஷிணபிநாகினியும், அமிர்தசஞ்சீவிகலந்த சிலாஹ்ருதமும் விரஜாநதி சம்பந்தமுடைய சுவாமி புஷ்கரணியுமாகிய நான்கெல்லைக்குட்பட்டதும் துண்டமானாலாளப்பட்டதுமான துண்டீரமண்டலத்தை இடமாகக்கொண்டுள்ளது:—

மாவலிச்சக்கரவர்த்தி தவம் புரிந்து பெருஞ்செல்வமடையப்பெற்ற மாவலிபுரம் உக்கிரசேனன் தவம் புரிந்து கன்னிகாரத்னமாகிய தேவகியைப் பெறப்பெற்ற தேவகிபுரம், அரம்பை ஊர்வசி முதலாயினாரினும்சிறக்கத்தவம்புரியப்பிரமனால் படைக்கப்பெற்ற விரிஞ்சிபுரம், சிவபெருமான் விஷயத்தைத் திருக்கரத்திலேந்தத் தேவர்கள் தவம் புரியப்பெற்ற நாகலாபுரம், ஆகிய நான்கு தவபுரங்களையும் நான்கு புரங்களிற்கொண்டதும் அதன் நடுவில் பார்வதியாரால் தவம் செய்யப்பட்ட தபோவனத்தையுடையதுமான காரணத்தால் தபோவனம் எனப்பெயர் பெற்றோங்குவது:—

திரிவேணிசங்கம ஸ்நானபலனைத்தந்த த்ரிவேணிசங்கம நகரம், நடராஜமூர்த்தி நிருத்த தரிசனம் தந்த வியாக்ரபுரநகரம், விஷ்ணுமூர்த்தி சேஷசயன தரிசனம் தந்த க்ஷீராப்திநகரம், நந்திவாய்க்கங்கையால்மோக்ஷதரிசனம்தந்தநந்திகங்காபுரநகரம் ஆகிய நான்குநகரங்களையும்நான்குபக்கங்களிற்கொண்டதும், பிரமனால்யாகம்செய்யப்பட்டதுமான பிரமசாலை எனப்பெயர் பெற்றுள்ளது:

இறந்துபோன தாய் தந்தையர் முதலாயினாரைக் காட்டும் மூன்றிடம், அமுதநீர் முதலானவற்றைக் கொடுக்கும் மூன்று வேதிவை, நெல்லரியுந்தோறும் மீளமீள விளைதல் முதலிய நான்கு வயல்கள், பிரமன்முதலாயினாரைக்காட்டும்சிங்கா[illegible]னங்கள் ஒரு நாளத்தில்மூன்று தாமரையைக் காட்டல் முதலிய

ஐந்து தடாகங்கள், ஏகாம்பரநாதர் வீற்றிருக்கும் ஆம்பரவிருக்ஷத்திற்கு வலமிடங்களிலுலாவுகின்றபறவு நாகணவாய்ப்புள் முதலிய ஆறு பறவைகள், முயல் யானையைத் துரத்தல் முதலிய எழு பொதுவிடங்கள், இச்சித்தவையெல்லாம் தருதல்முதலிய எட்டுப் பொய்கைகள், தீண்டினரைத் தேவாக்கல் முதலிய ஒன்பது கற்கள், நவரத்தினங்களைப் பொழிகின்ற ஒன்பது சோலைகள், மகா பாதகரை ஊமையாக்கல் முதலிய பத்துச்சபைகள், பார்த்தவர் நிழல் தோன்றுமற் செய்தல் முதலிய பதினொரு கூவல்கள் ஆகிய வற்புதங்களைச் காட்டும் அற்புத க்ஷேத்திரமாகியும்

கல்விமண்டபம், கணக்கறிமண்டபம், கலைக்கூத்து மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், ஆடல் மண்டபம், ஆஸ்தானமண்டபம், பாடல் மண்டபம், துலாபாரதான மண்டபம் பரமாநந்தம் முதலிய மூன்று முக்தி மண்டபம் முதலியவைகளால் பொன்னுலகினும் அழகு பெற்றிருக்கும் அலங்காரநகரமாகியும்

மேலும் சத்திய சத்தியர், சத்திய சோதகர், சத்தியசங்கற்பர், சத்தியகாமர்களாகிய சரியை கிரியா யோகஞானிகள் வாழப் பெற்ற சத்தியவிரதக்ஷேத்திரமாகியும்

பிரமனுக்கு ஞானோதயமுண்டாக்கிய க்ஷீர, புண்ய, பாகு, வேகவதி, அரித்திராம்பு, பம்பை, கம்பை முதலிய ஸப்தநதிகளும், ததீசிமுனிவர் முதலிய பலர்க்கும் இஷ்ட சித்திகளைக் கொடுத்த இஷ்ட சித்தி தீர்த்தம், சிவகங்கை, மங்கள தீர்த்தம், இந்திர தீர்த்தம், காயாரோகண தீர்த்தம், சதாசிவமூர்த்தி ஜடைமுடியினின்றும் பெருகிய பஞ்சதீர்த்தம், உருத்திர மூர்த்தியின் ரோம கூபத்தினின்றும் பெருகிய சர்வதீர்த்தம் முதலிய ஸப்தவார தீர்த்தங்களும், வரதராஜ மூர்த்தி வீற்றிருக்கும் ஹஸ்திகிரி முதலிய பர்வதங்களும் தர்மார்த்த காம மோக்ஷங்களைக் கோடிகோடியாகத் தரவல்ல காமகோட்டம் முப்புராரிகோட்டம் குமரகோட்டம் கச்சபாலயம் முதலிய ஆலயங்களும் ஆகியாதிபர்வதாலயங்களாற் சூழப்பட்ட பாஸ்கர க்ஷேத்திரமாகியும்

நிலமகட்கு உந்தித்தானமாகிய காமகோடி முதலிய பிலங்களும் காமாக்ஷிதேவி முதலிய முச்சக்திகளும் வழிபடுவதற்கிடமாயுள்ள மா முருக்கு கூவிளம் முதலிய விருக்ஷங்களும், மேகவாகனமாயிருந்து வழிபட்டுப் பெற்ற திருமாலுக்கு நிலயமாயுள்ள

புண்ணியகோடி விமானங்களால் முத்ரிக்கப்பட்ட தைஜஸ்க்ஷேத்திரமாகியும்

இருநாழி நெற்கொண்டு முப்பத்திரண்டறங்களும் நிலைபெறற் செய்தற்கிடந்தவரல்ல தர்மக்ஷேத்திரமாகியும்

அருவுருவங்குறு குணங்கள் முதலீறு கட்டுவிடனைத்துமின்றி பெருமையதாய் நுண்ணியதாய்ப் பேருணர்வாயானந்தப் பிழம்பாயெங்கும், ஒருமுதலாயழிவின்றியோங்கொளியாய் நிறைந்துளதாயுயிர்கடோறும் விரவியுடன்றொழிற்படுத்துப் புலங்கொளுத்தி வீடுய்க்கும் பதி உய்வண்ணமறியாது இருள்மலத்திலிருவினையாற் பிணிப்புண்டு மருளின் மூழ்கிக் கிடக்கும் ஆன்மாக்களை யிருவினைக்குறிய பிறவியுட்படுத்திச் சுவர்க்க நரகாதிகளில் ஊசலெனச் சுழல்வித்துப் பருவநோக்கி மெள்ள வினைப்பயனூட்டி அதுபின் என்றும் அணுகாவண்ணம் காத்தற்பொருட்டு கச்சபேசம் சித்தீசம், காயாரோகணம், வீராட்டகாசம், திருவேகம்பம் என்னுமிடங்களில் தோற்ற நிலையிறுதிமறைப்பு அருளென்னும் பஞ்சகிருத்தியமாகிய தாண்டவம்புரியும் ரக்ஷாதாண்டவக்ஷேத்திரமாயும்,

சரியை கிரியா யோகங்களாலடையத்தகும் சாலோகாதிபதிமுத்திகளுட்சிறந்து சிவஞானத்தாலடையப்படுவதாகிய தன்னிகரில் கேசாந்தமுறுமாவி தன் சிரத்துக்கபாலங்கீறி, வன்னியினிற் போய் வாயுவினிற் புல்லெனப்போயிரவி மாட்டுப்பின்னமறு சுவ்வெனப்போய் விண்ணரசின் மகவெனப்போய்ப் பிரமத்தொன்றாய் மன்னிடுமிக்கே சாந்தமுக்தியாகிய துவாதசாந்த முக்தியினை மெய்ஞ்ஞானிகளேயன்றி ஒன்றுணரா மடவோர்கள் விலங்கு மாமுதலனைத்து முயிர்போங்காலை மன்றமிசைத் தலையோடுகீறி யுடல் விடுத்தேகுங்கால் வழங்கிப் பிறவா நெறியளிக்கும் துவாதசாந்தாதீத முக்திக்ஷேத்திரமாகியும்,

இடையூறகற்றவும் அளிக்கவும் வந்த விநாயகரும், தந்தைமொழி தவிர்ந்ததனால்வந்த சுப்பிரமணியரும், பிரமகபாலத்தில் திருமால் முதலியோருதிர மேற்றுப் பூதங்களுக்குப் பகிர்ந்த பைரவக்கடவுள் முதலிய சிவகணங்களும்,